விலை ரூபா: 10.00

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: நான்கு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2038 சித்திரை 13 வியாழக்கிழமை (26.04.2007) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 128

MADRAS CEMENTS LTD
RAMCO
கோ RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

## பிரட்ஸ்கரின் கிளிநொச்சிப் பயணத்திற்கு அரசாங்கம் தடைவிதிக்கவில்லை

### அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல விளக்கம்

(கொழும்பு)

நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கரின் கிளிநொச்சிக்கான விஜயத்திற்கு அரசாங்கம் தடை விதிக்கவில்லை என அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கரின் கிளிநொச்சிக்கான பயணத்திற்கு அரசாங்கம் தடைவிதித்ததாக சில ஊடகங்கள் வெளியிட்ட செய்திகளில் எவ்வித உண்மையும் இல்லை என தேசிய பாதுகாப்புக்கான பேச்சாளரும் (04 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத்தினரின் தாக்குதலில் புலிகளின் விமானத்துக்குச் சேதம்?

### விமானப் படைப் பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

பலாலி படைத் தளம் மீது தாக்குதல் நடத்த வந்த விடுதலைப்புலிகளின் விமானம் மீது படையினர் மேற்கொண்ட தாக்குதல் காரணமாக அந்த விமானம் சேதமடைந்திருக்கலாம் என தான் நம்புவதாக விமானப் படைப் பேச்சாளர் குறூப் கப்டன் அஜந்த சில்வா கூறியுள்ளார்.

தேசிய பாதுகாப்புத் தொடர்பாக விளக்கமளிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்றுக் காலை தேசிய பாதுகாப்புக்கான ஊடக மையத்தில் (04 ஆம் பக்கம் பார்க்க)

# மன்னாரில் நேற்றுக் காலை இராணுவம் - புலிகள் மோதல்

### சேத விபரம் குறித்து மாறுபட்ட தகவல்

(மன்னார்)

மன்னாரில் நேற்றுக் காலை இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் மோதல் இடம்பெற்றுள்ளது. இம் மோதலின் போது 21 விடுதலைப்புலிகள் பலியானதாக இராணுவத் தரப்பும், 12 இராணுவத்தினர் பலியானதாக விடுதலைப்புலிகளும் தெரிவித்துள்ளனர். (04 ஆம் பக்கம் பார்க்க)

## அரையிறுதிப் போட்டியைக் காண விடுதலைப்புலிகள் போர் நிறுத்தம்

### ஏ.எவ்.பி. செய்தி வெளியீடு

(கொழும்பு)

இலங்கை - நியூசிலாந்து அணிகள் மோதிய உலகக் கிண்ண அரையிறுதிப் போட்டியைக் காண்பதற்காக நேற்று முன்தினம் இரவு மட்டும் விடுதலைப்புலிகள் போர் நிறுத்தத்தைக் கடைப்பிடித்ததாக ஏ.எவ்.பி. செய்தி வெளியிட்டுள்ளது. அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

உலகக் கிண்ணக் கிரிக்கெட் அரையிறுதியில் நியூசிலாந்துடன் இலங்கை அணி மோதுவதால் நேற்று முன்தினம் இரவு மட்டும் போர் நிறுத்தத்தில் ஈடுபட்டதாக விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர்.

நாங்களும் (04 ஆம் பக்கம் பார்க்க)

## யப்பான் தூதரக ஆலோசகருடன் தமிழ்க் கூட்டமைப்புச் சந்திப்பு

(கொழும்பு)

இலங்கைக்கான யப்பானியத் தூதரகத்தின் அரசியல் விவகார ஆலோசகரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

நேற்றுப் பிற்பகல் 1.30 மணியளவில் மாருவெலப் பகுதியில் அமைந்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அலுவலகத்தில் சந்திப்பு இடம்பெற்றது.

மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்த பின்னர் கிழக்கு மட்டக்களப்பில் 3 இலட்சத்து 50 ஆயிரம் மக்கள் இடம்பெயர்ந்து அவல வாழ்வு வாழ்வதாகவும் வடக்கு மற்றும் கிழக்கு அபிவிருத்திக்கு யப்பான் வழங்கும் அபிவிருத்தி நிதி யுத்தத் தளபாடத்துக்கே பயன்படுவதாகவும் (04 ஆம் பக்கம் பார்க்க)

## கருணாநிதிக்கும் கொலை மிரட்டல்

(சென்னை)

விடுதலைப்புலிகள் அமைப்பின் பேரில் தமிழக முன்னாள் முதல்வரும் அ.தி.மு.க. பொதுச் செயலாளருமான ஜெயலலிதாவுக்கு கொலை மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளதாக வெளியான தகவலையடுத்து தற்போது தமிழக முதலமைச்சர் மு.கருணாநிதிக்கு அல் உம்மா என்ற தீவிரவாத அமைப்பின் பேரில் கொலை மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது.

மதுரையில் உள்ள ஒரு கல்லூரியின் பெயருக்கே இந்த மிரட்டல் கடிதம் வந்துள்ளது. அக் கடிதத்தில், தமிழக முதலமைச்சர் கருணாநிதி மதுரைக்கு வரும்போது அவர் மீது வெடிகுண்டுத் தாக்குதல் நடத்தப்படும். முடிந்தால் தடுத்துக் கொள்ளுங்கள் என்று அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேபோல் மதுரை மீனாட்சி அம்மன் சித்திரைத் தேர்த்திருவிழா தற்போது நடைபெற்று வரும் நிலையில் ஆலய நிர்வாக அதிகாரிக்கும் (04 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளக் கூடியதான தீர்வு யோசனை முன்வைக்கப்பட வேண்டும்

### அமைச்சர் திஸ்ஸ விதாரண வேண்டுகோள்

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்குத் தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளக் கூடிய தீர்வு யோசனைகள் முன்வைக்கப்பட வேண்டுமென்று சர்வகட்சி பிரதிநிதிகள் குழுவின் தலைவர் அமைச்சர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

வடக்குக் கிழக்குப் பிரச்சினைக்கான தீர்வைப் பெற்றுக்கொள்வதற்கான பிரேரணையைத் தயாரிப்பதற்கான திருப்திகரமான நடவடிக்கைகளை சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழு மேற்கொண்டுள்ளது.

இத் தீர்வு திருப்திகரமானதாக அமைவது மாத்திரமின்றி தமிழ்ச் சமூகத்தினரது நம்பிக்கையையே வெற்றிகரமானதாக நிறைவேற்றக் கூடியதாகவும் அமையும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

பிரிவினைவாதம் ஒழிக்கப்பட்டு ஐக்கிய இலங்கைக்குள் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும். அனைத்துக் கட்சிகளின் யோசனைகள் அடங்கிய பொதுத் தீர்வு (04 ஆம் பக்கம் பார்க்க)

## சூட்டுக் காயங்களுடன் இளைஞனின் சடலம் மீட்பு

(வவுனியா)

வவுனியாவில் துப்பாக்கிச்சூட்டுக் காயங்களுடன் இளைஞன் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இச்சடலம் வவுனியா தாளிக்குளம் 8 ஆம் மைல்கல் பகுதியில் நேற்றுக் காலை மீட்கப்பட்டுள்ளது. சுமார் 23 வயது மதிக்கத்தக்க இவ் இளைஞனின் சடலம் கடத்தப்பட்ட இளைஞரில் ஒருவருடையதாக இருக்கலாம் என வவுனியாப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-5)

## பவள் கவச வாகனம் மீது அம்பாறையில் தாக்குதல்

(அம்பாறை)

அம்பாறை வக்கிமுட்டியாப் பகுதியில் பவள் கவச வாகனம் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் சிறப்பு அதிரடிப்படையினருக்கு இழப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்று தமிழீழ விடுதலைப்புலிகளின் இராணுவப் பேச்சாளர் இராசையா இளந்திரையன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது;

அம்பாறை கஞ்சிக்குடிச்சாறு பின்பகுதியிலுள்ள வக்கிமுட்டியாப் பகுதியில் பவள் கவச வாகனத்தில் சிறப்பு அதிரடிப்படையினரும் ஊர்காவற் படையினரும் சென்று கொண்டிருந்த போது இந்த அணி மீது நேற்றுக் காலை 8.15 (04 ஆம் பக்கம் பார்க்க)

## முதலமைச்சர்களை நியமித்து அதிகாரத்தைப் பகிரத் திட்டம்

### சு.க.மத்திய குழுவிடம் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்குத் தீர்வாக மாவட்ட மட்டத்தில் முதலமைச்சர்களை நியமித்து கிராம மட்டத்தில் கிராம இராச்சியங்களை உருவாக்கும் முறைமை அடிப்படையிலான தீர்வுத் திட்ட யோசனை ஒன்றை சிறிலங்கா சுதந்திரக் கட்சி தயாரித்துள்ளதாகத் தெரியவருகின்து.

அலரி மாளிகையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சுதந்திரக் கட்சியின் மத்திய குழு கூட்டத்தில் அக்கட்சியின்அரசியல் தீர்வு யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இந்த யோசனை ஒரு சிலரின் எதிர்ப்புக்கு மத் (04 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# உலகக் கிண்ணக் கிரிக்கெட் 2007

ICC Cricket World Cup

## நியூசிலாந்துடன் அபார வெற்றி பெற்று இலங்கை அணி இறுதிப் போட்டிக்கு நுழைவு

### அணித்தலைவர் மஹேல அதிரடிச் சதம்

மஹேல ஜெயவர்த்தனாவின் அதிரடி சதம்,முத்தையா முரளிதரனின் துல்லியமான சுழல் பந்து வீச்சில் நியூசிலாந்தை 81 ஓட்டங்களால் அபார வெற்றி பெற்று இலங்கை அணி இறுதிப்போட்டிக்கு நுழைந்தது. மேற்கிந்திய தீவுகளில் நடைபெற்றுவரும் உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரில் நேற்று முன்தினம் ஜமேக்காவில் நடைபெற்ற முதலாவது அரையிறுதியில் இலங்கை-நியூசிலாந்து அணிகள் மோதின.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணித் தலைவர் மஹேல ஜயவர்த்தனா முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார். இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணிக்கு ஆரம்பத்தில் அதிர்ச்சியளித்து அணி 2.3 ஓவர்களில் 13 ஓட்டங்களைப் பெற்ற போது ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் சனத் ஜயசூரியா ஒரு ஓட்டத்துடன் பிறாங்கிலினின் பந்து வீச்சில் போல்டாகி ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து இணைந்த தரங்க-சங்கக்கார ஜோடி சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி ஓட்டங்களைக் குவித்தது. எனினும் அணி 13.3 ஓவர்களில் 67 ஓட்டங்களைப் பெற்ற போது குமார் சங்கக்கார 18 ஓட்டங்களுடன் பிறாங்கிலினின் பந்து வீச்சில் ஸ்ரீபன் பிளமிங்கிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து மூன்றாவது விக்கெட்டுக்கான உப்பிள் தரங்கவுடன் ஜோடிசேர்ந்த அணித்தலைவர் மஹேல ஜயவர்த்தன திறமையாக துடுப்பெடுத்தாடினார். 25.1 ஓவர்களில் 111 ஓட்டங்களைப் பெற்ற போது உபுல் தரங்க 73 ஓட்டங்களுடன் டானியல் விட்டோரியின் பந்தில் போல்ட் ஆகி ஆட்டமிழந்தார்.

சாமரசில்வா களமிறங்கினார். அணி 34.3 ஓவர்களில் 152 ஓட்டங்களைப் பெற்றபோது சாமர சில்வாவும் 21 ஓட்டங்களுடன் பொன்டின் பந்துவீச்சில் எல்.பி. டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.

மறுமுனையில் மஹேல ஜயவர்த்தனா தனது வழமையான அதிரடியை ஆரம்பிக்க அணியின் ஓட்ட எண்ணிக்கை அதிகரித்தது. ஜயவர்த்தனாவும் திலகரட்ண டில்சானும் அதிரடியாக ஆடினர். எனினும் அணி 45.1 ஓவர்களில் 233 ஓட்டங்களைப் பெற்றபோது டில்சான் 30 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

இறுதியில் இலங்கை அணி 50 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுகளை இழந்து 289 ஓட்டங்களைப் பெற்றது. இதில் மஹேல ஜயவர்த்தன 115 ஓட்டங்களையும் உபுல் தரங்க 73 ஓட்டங்களையும் பெற்றனர். தொடர்ந்து 50 ஓவர்களில் 290 ஓட்டங்களை பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி இலங்கை அணியின் பந்து வீச்சாளர்களின் கூட்டணியின் சிறப்பான பந்து வீச்சில் 41.4 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 208 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 81 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

இதில் ஸ்கொட் ரைரிஸ் 37 ஓட்டங்களையும் பட்டேல் 34 ஓட்டங்களையும் பிறாங்கிலின் ஆட்டமிழக்காமல் 30 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் இலங்கை அணி சார்பாக நம்பிக்கை நட்சத்திரம் முத்தையா முரளிதரன் 4 விக்கெட்டுக்களையும்,ஜெயசூரியா டில்சான் தலா 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

போட்டியின் ஆட்டநாயகனாக இலங்கை அணித் தலைவர் மஹேல ஜயவர்த்தன தெரிவானார். வெற்றிக்களிப்புடன் இலங்கை அணி 1996 ஆம் ஆண்டு நடைபெற்ற உலகக் கிண்ண கிரிக்கெட் தொடருக்குப் பின்னர் இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

1996 ஆம் ஆண்டு இறுதிப் போட்டியில் அவுஸ்திரேலியாவை வீழ்த்தி உலகக் கிண்ணத்தை கைப்பற்றியது இலங்கை அணி. இம்முறையும் வெல்லுமா? (ச-5)

அனுசரணை:
இவ்வருட புதுவருட கொடுக்கல் வாங்கலுக்கு மக்கள் வங்கியின் உற்சாகமான உபசரிப்பு!
மக்கள் வங்கி
விசேட சேமிப்புப் பத்திரத்தினைப் பரிசாகப் பெறுங்கள்!
நீங்கள் சேமிக்கும் ரூ.25,000
பெறுமதியான புதுவருடக் கொடுக்கல் -
வாங்கல் சேமிப்பு சான்றிதழுக்கு ரூ.500 பெறு
மதியான சேமிப்பு பத்திரம் ஏப்ரல் 30 ஆம் திகதி
வரை அனைத்து மக்கள் வங்கிக் கிளைகளிலும்...

## நன்கொடை விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள சனசமூக நிலையங்களுக்கு சென்ற ஆண்டுக்கான நன்கொடை நிதி தற்போது வழங்கப்பட்டு வருவதாக யாழ்.மாநகர ஆணையாளர் மு.செ.சரவணபவ தெரிவித்துள்ளார்.

இந் நன்கொடை நிதியினை இதுவரை பெற்றுக்கொள்ளாத சனசமூக நிலையங்கள் அலுவலகத்தில் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ள முடியுமென அவர் மேலும் கூறியுள்ளார். (ச-3)

## மருத்துவ முகாமும் மாணவர் கௌரவிப்பும்

(யாழ்ப்பாணம்)

தீவக லயன்ஸ் கழகத்தினால் சிக்கின்குனியா மாபெரும் மருத்துவ முகாமும் 2006 ஆம் ஆண்டு க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு நெடுந்தீவு மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

அனுபவமிக்க மருத்துவ நிபுணர்களால் விழிப்புணர்வுக் கருத்தரங்கு, மருத்துவப் பரிசோதனை மற்றும் மருந்து விநியோகங்களும் இடம் பெறவுள்ளன. (ச)

## மாணவர்கள் கௌரவிப்பு

ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை,க.பொ.த.சாதாரண தரப் பரீட்சை ஆகியுவற்றில் சித்தியடைந்த மாணவர்கள், தென்மராட்சி கிழக்கு லயன்ஸ் கழகத்தினால் கௌரவிக்கப்படவுள்ளனர்.

நாளை மறுதினம் தென்மராட்சிப் பிரதேசசபை கேட்போர் கூடத்தில் இந் நிகழ்வு நடைபெறவுள்ளது. இந் நிகழ்வில் வறுமைக்கோட்டிற்கு கீழ்வரும் பெண்ணொருவருக்கு தையல் மிசின் ஒன்றும் வழங்கப்படவுள்ளதாக தென்மராட்சி கிழக்கு லயன்ஸ் கழகத்தலைவர் தெரிவித்துள்ளார். (ச)

## மரண அறிவித்தல்

### திருமதி. சத்தியபாமா இரத்தினசபாபதி (டெய்சி)



நல்லூரைப் பிறப்பிடமாகவும் கனடாவைவசிப்பிடமாகவும்கொண்ட திருமதி சத்தியபாமா இரத்தின சபாபதி (டெய்சி) 20.04. 2007-ம் திகதி அவுஸ்திரேலியாவில் காலமாகிவிட்டார்.

இவர்காலஞ்சென்றஆசைப்பிள்ளை இரத்தினசபாபதியின் அன்பு மனைவியும், இளங்கோவன், இளஞ்சேயன், அனுஷியா ஆகியோரின் தாயாரும், இராமலிங்கம் சின்னத்துரை (பப்பா), -(ஓய்வுபெற்ற புகையிரத நிலைய அதிபர்)-, சின்னத்துரை காமாட்சியம்மா ஆகியோரின் புதல்வியும், எஸ்.ஜெயபதி (ஓய்வுபெற்ற விவசாய ஆராய்ச்சி உத்தியோகஸ்தர்-அவுஸ்திரேலியா), திருமதி குமாரசாமி சரோஜினிதேவி (ரூபி)அவுஸ்திரேலியா, திருமதி செல்வரத்தினம் சற்குணதேவி-மேஸி- கொழும்பு, டாக்டர் திருமதி சுந்தரமூர்த்தி சகுந்தலாதேவி-(பேபி), அவுஸ்திரேலியா, திருமதி நாகராசா சந்திரலீலா (ஓய்வு பெற்ற ஆசிரியை) யாழ்ப்பாணம், திருமதி தேவமனோகரன் சாந்தினி(கிரேஸி) கணக்காளர், அவுஸ்திரேலியா, டாக்டர் திருமதி ரவீந்திரராஜா சுசீலா (குளோறி), அவுஸ்திரேலியா,திருமதி கணேஷ்குமார் சுலோசனா (சட்டத்தரணி), அவுஸ்திரேலியா ஆகியோரின் அருமைச் சகோதரியுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் அவுஸ்திரேலியாவில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

1160/14 அருளம்பலம் ஒழுங்கை,
பருத்தித்துறை வீதி,
நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம்.

தகவல்:
த.நாகராஜா
ஓய்வு பெற்ற அதிபர்

(C-029)

## கிரிக்கெட் தடை ஏற்படுத்த புலம்பெயர்ந்தோர் முயற்சி

(கொழும்பு)

சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் இலங்கை அணிக்கு தடை ஏற்படுத்த புலம்பெயர் தமிழர்கள் தீவிர திட்டமிடலில் ஈடுபட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

விளையாட்டும் அரசியலும் பின்னிப்பிணைந்தவையாகவே காலங்காலமாக இருந்து வருகின்றது. இந்த வகையில் தென்னாபிரிக்க அணி தனது வரலாற்றில் சந்தித்த துடுப்பாட்டப் போட்டிகளுக்கான தடை பற்றிய விழிப்புணர்வு புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களிடத்தில் எழுந்துள்ளது.

சர்வதேச மன்னிப்புச்சபையின் இலங்கையின் பிரசாரப் போரிற்கு முழுமையான ஆதரவைத் தருவதாக இங்கிலாந்தின் முக்கிய கட்சியான டெமோக்கிரட்ஸ் அறிவித்துள்ளது. (எ-1)

யோகா கற்கை நெறிகள்
இலங்கையில் முதல் தடவையாக
Yoga Education
Diploma / Advance Diploma in Yoga ~ 1year
தகமை : க. பொ.த உயர்தரத்தில்(A/L) 3 பாடத்தில் சித்தி
20 வயதிற்கு மேற்பட்டோர்
உடல் உளத் தகுதிச் செயற்பாட்டில் ஆர்வம்
Certificate in Yoga - 6 month
கல்வித்தகமையோ, வயதுக்கட்டுப்பாடோ இல்லை.
சமூக சேவைச் செயற்பாட்டில் ஆர்வம்
மாணவர்கள், உத்தியோகத்தர்களிற்கான தனிப்பட்ட வகுப்புக்கள், குழு வகுப்புக்கள் !
கற்கை நெறிகளைப் பின்பற்ற விரும்புவோர் சுயவிபர ஆவணங்களுடன் எதிர் வரும் 28-04-2007 சனிக்கிழமை 9.30 A.m -2.30 P.m ற்குள் அலுவலகத்திற்கு சமூகம் தரவும்
yoga therapy
உள உடல் ரீதியாகப் பாதிக்கப்பட்டவர்கள்,நோய்வாய்ப்பட்டவர்களுக்கான சிகிச்சைகள் வழங்கப்படும்(நோயாளிகள் மருத்துவ அறிக்கையுடன் சமூகமளிக்கவும்)
இந்தியா உயர் பல்கலைக்கழகத்தில் விசேட பயிற்சி பெற்ற அநுபவம் மிக்க விரிவுரையாளர்கள்
SALD SOCIETY
SOCIAL ART LITERATURE PSYCHOLOGICAL DEVELOPMENT SOCIETY
சமூக கலை இலக்கிய உள நல மேம்பாட்டு மையம்
Station Road, Chunnakam, Jaffna, Srilanka.
சமூக கலை இலக்கிய உள நல மேம்பாட்டு மையம் புகையிரதவீதி, சுன்னாகம்
E-mail :saldsociety@yahoo.com
Tel: (+94) 776141357
: (+94) 779906475

## திட்டமிடல் சேவையின் போட்டிப் பரீட்சை

(கொழும்பு)

கடந்த ஜனவரி மாதம் 28 ஆம் திகதி நடைபெறவிருந்த திட்டமிடல் சேவையின் 2 ஆம் வகுப்பின் II ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்புக்கான திறந்த போட்டிப்பரீட்சை எதிர்வரும் மே மாதம் ஐந்தாம் திகதி சனிக்கிழமை கொழும்பில் அமையப்பெறும் 53 பரீட்சை நிலையங்களில் நடைபெறும் எனவும் இப் பரீட்சைக்கு 7 ஆயிரத்து 900 பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளனர் எனவும் பரீட்சைகள் திணைக்கள ஆணையாளர் அநுர எதிரிசிங்க தெரிவித்தார்.

இப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள சகல பரீட்சார்த்திகளுக்கும் பரீட்சைக்கான நேர சூசி மற்றும் அனுமதி அட்டைகள் உரிய முகவரிக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப் பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

பரீட்சைக்கான அனுமதி அட்டை கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரிகள் பரீட்சைத் திணைக்களத்தின் ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளையின் தொலைபேசி இலக்கம் 0112785 230 வுடன் தொடர்பு கொண்டு தமது முழு விபரங்களையும் தெரிவித்துப் பெற்றுக்கொள்ள முடியும் என ஆணையாளர் மேலும் கூறினார். (ச-5)

> விபரீதமான சூழ்நிலையில் தாழ்ந்த சுபாவங்களை விட மேலான நுட்ப சுபாவங்கள்தான் விரைவில் கேடுஅடைகின்றன.
>
> -பிளேட்டோ

வலம்புரி

## மீண்டும் ஓர் யுத்தத்திற்கான சவாலை எதிர்கொள்ளத் தயாராக வேண்டும்

யாழ்.குடாநாட்டில் எதிர்கால சூழ்நிலை ஆரோக்கியமானதாக தெரியவில்லை. எந்நேரமும் மிகப்பெரிய அளவில் யுத்தம் முன்னெடுக்கப்படுவதற்கான அறிகுறிகள் தாராளமாக தென்படுகின்றன.

சமாதானத்தை மீள ஆரம்பிப்பதற்கான முன்னாயத்த முயற்சிகள் எதிர்கணியப் பெறுமானத்தில் செல்கிறது.

இன்னும் சில நாட்களில் வட பகுதியில் தாக்குதல் நடத்தப்படுமென பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க கூறியுள்ள நிலையில், நிலைமை மேலும் மோசமடைவது உறுதியாகி விட்டது.

யுத்தத்தின் தாக்கத்தை ஆட்சியாளர்கள் உணர்ந்து கொள்ளாதவரை யுத்தத்தை நடத்தி அழிவு ஏற்படுத்தும் சிந்தனை மாறப்போவதில்லை.

அதேநேரம் போர்ச் சூழலுக்கான அறிகுறி தென்படத் தொடங்கியதும் குடாநாட்டில் பொருட் பதுக்கல், விலையேற்றம் என்பன உடனடியாக அமுல்படுத்தப்பட்டு விடும்.

இத்தகைய துர்ப்பாக்கிய நிலையூடே, பொருட்கள் சந்தைக்கு வந்து விட்டால் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களை மறந்து விடும் மக்களின் செயல் மற்றுமோர் துர்ப்பாக்கியமாகும்.

இவ்வாறு பொருத்தமற்றதும் தூரநோக்கற்றதுமான யாழ்ப்பாணத்துச் சந்தை அமைப்பு ஏற்படப்போகும் யுத்த சூழ்நிலைக்கு ஈடுகொடுக்க முடியாதென்பது தெரிந்த விடயம்.

எனவே இங்கு உரிய அதிகாரிகள் பொருத்தமான நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டிய தேவை உருவாகின்றது.

குறிப்பாக யாழ்.குடாநாட்டிற்கு குறைந்தது ஆறு மாதங்களுக்குப் போதுமான உணவுப் பொருட்கள் மற்றும் எரிபொருட்களை களஞ்சியப்படுத்துவது அவசியமாகும்.

இது விடயத்தில் தனியார் வர்த்தகர்கள் அல்லது வணிகர் கழகங்களின் ஒத்துழைப்பையும் பெற்றுக்கொள்ள வேண்டும்.

சிக்கல்கள் ஏற்பட்ட பின்னரான சீராக்கங்களை விட பிரச்சினை ஏற்பட்டால் அதனை எவ்வாறு சமாளிப்பது என்ற வகையிலான முன்நடவடிக்கைகள் ஒழுங்கான பங்கீட்டிற்கு உதவுவதாக இருக்கும்.

உதாரணமாக எரிபொருளைப் பெறுவதற்காக யாழ்.அரச அதிபரினால் அறிமுகப்படுத்தப்பட்ட 'எரிபொருள் பங்கீட்டு அட்டை' எரி பொருள் தேவைகளை-விநியோக ஒழுங்கை சீர்படுத்தியுள்ளது என்றே கூறவேண்டும்.

எரிபொருள் பங்கீட்டு அட்டையை விநியோகிப்பதுவரையில் பல்வேறு நடைமுறைச் சிக்கல்கள், வேலைப்பளுக்கள் இருந்தாலும் பங்கீட்டு அட்டை வழங்கியதைத் தொடர்ந்து பாவனையாளர்கள் எரிபொருளை ஒழுங்குமுறையில் பெற முடிந்தது.

இத்தகைய ஒழுங்கு முறைகளில் மோசடிகள், ஊழல்கள் குறைக்கப்படும். ஆக இதுபோன்ற நடைமுறைகளை ஒழுங்குபடுத்துவது எதிர்கால அசாதாரண சூழ்நிலைக்கு முகம் கொடுக்கும் எனலாம்.

# புனர்வாழ்வுக்கழக பணிப்பாளருக்கு கொழும்பு நீதிமன்றம் அழைப்பாணை

தற்போது வெளிநாட்டில் தங்கியிருக்கும் தமிழர் புனர்வாழ்வுக்கழக நிறைவேற்றுப் பணிப்பாளரை நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு மற்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஊடாக அழைப்பாணை விடுக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கொழும்பு பிரதம நீதிவான் சறோஜினி குசலாவ வீரவர்த்தன அவ் அழைப்பினை விடுத்துள்ளார். குற்றப்புலனாய்வு திணைக்கள அதிகாரிகளினால் நீதிமன்றத்தில் விடுக்கப்பட்ட கோரிக்கைகளை அடுத்து நீதிவான் இவ் உத்தரவை பிறப்பித்துள்ளார்.

தமிழர் புனர்வாழ்வு கழகத்திற்கு கிடைத்த வெளிநாட்டு நிதியை பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தி இருப்பதாக மத்தியவங்கி செய்த முறைப்பாட்டையடுத்து குற்றப்புலனாய்வுத் திணைக்களம் இவ் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

தமிழர் புனர்வாழ்வுக்கழக கணக்கு இலக்கங்களை பரிசீலனை செய்திருப்பதாக குற்றப்புலனாய்வுத் திணைக்களம் நீதிமன்றத்திற்கு அறிவித்திருந்தது. தற்போது வெளிநாட்டிலிருக்கும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நிர்வாக இயக்குநரையும் ஏனைய இரண்டு பணிப்பாளர்களையும் யூன் மாதம் 20 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு பிரதம நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (ச-3)

# விடுதலைப்புலிகளின் விமானத்தை தாக்கும் தந்திரோபாயம் இராணுவத்திடம் உள்ளது

## யாழ்.இராணுவத் தளபதி தெரிவிப்பு

(கொழும்பு)

புலிகளின் எந்தவொரு தாக்குதலையும் எதிர்கொள்ளும் தைரியமும், மனோவலிமையும் படையினரிடம் இருப்பதாக யாழ்.கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சந்திரசிறி தெரிவித்துள்ளார். பலாலி இராணுத் தளத்தை இலக்கு வைத்து நேற்று முன்தினம் அதிகாலை புலிகளால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் முயற்சியின் போது மயிலிட்டி பகுதியில் குண்டு வீழ்ந்து வெடித்ததில் ஏற்பட்ட சேதங்களைப் பார்வையிட கொழும்பிலிருந்து விசேட ஹெலி மூலம் அப் பகுதிக்கு ஊடகவியலாளர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர். இவர்களிடம் இச் சம்பவம் குறித்து விளக்கமளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது புலிகளின் தந்திரோபாய நடவடிக்கையாகும். புலிகளின் எந்தவொரு தாக்குதலையும் முறியடிப்பதற்கு படையினர் தயாராக இருக்கின்றனர். புலிகளின் சிறியரக விமானத்தைத் தகர்ப்போம் அதற்கான தந்திரோபாயம் எங்களிடம் உள்ளது.

சதுப்பு நிலமுள்ள பகுதியினுடாகவே புலிகளின் விமானம் ஊடுருவியிருக்கிறது. இங்கு குறைந்தளவு படையினரே கடமையில் இருந்தனர். எனினும் பலாலி நோக்கி விமானம் வருவதைக் கண்ட படையினர் உடனடியாகச் செயற்பட்டு விமானத்தை துரத்தியடித்தனர். விமானம் தப்பிச் செல்லும் போதே மூன்று குண்டுகளை மயிலிட்டி பகுதியில் வீசிவிட்டு சென்றுள்ளது எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ச-5)

# வெளிவாரியாக கலைமாணிப் பட்டம் பெறும் 217 மாணவர்களின் பெறுபேறு வெளியானது

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகத்தின் வெளிவாரி பட்டப்பதிவுகள் பரீட்சைகள் அலகினால் 2002 ஆம் ஆண்டுக்கான கலைமாணிப் பட்டம் பெறும் 217 மாணவர்களின் விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளது. அவ் மாணவர்களின் விபரம் வருமாறு;

எவ்.லொலிற்றா, எஸ்.துர்காயினி, ஏ.வாணி, எஸ்.பிரகாசன், பி.ரஜனி, கே.உமா, எஸ்.சிவதாசன், கே.சிறிராஜ்குமார், பி.ரகுமான், எம்.அகிலா, ஆர்.சுமிதா, ஏ.கிருஷாந்தினி, ஜே.கோமதி, திருமதி மேரிகொன்சலா கிங்ஸ்லி றோபேட், பி.சுகன்யா, கே.தவச்செல்வி, என்.விஜிதா, எஸ்.நற்குணலிங்கம், எஸ்.சிவசங்கர், பி.சோபனா, பி.தேவகி, எஸ்.சரோஜாதேவி, கே.செல்வராணி,

ஆர்.பிறேமகுமாரி, ரி.ஜெயலக்சுமி, ஜெ.பீற்றர் பெயின்வேணு, என்.அன்பழகன், ஆர்.ரமேஸ், எஸ்.கங்காதரன், ஏ.ஜசிந்தராணி, என்.கீதபொன்கலன், ரி.மோகன், ரி.மோகன்ராஜ், ரி.தாமரி, எஸ்.வரதராசா, கே.செல்வகுமாரன், எஸ்.விஜயலக்சுமி, கே.கணேசதேவா, பி.கலைவாணி, ரி.ஜசிந்தவேணி, ஏ.ஜெயந்தி, எஸ்.ஜெயந்தி, ஏ.ஜமேஷ்மேஷன், ரி.பிறேமநாத், பி.தியாகராசா, எஸ்.யுவனிதா தயாளினி,

எஸ்.சிவகெளரி, எம்.தெய்வலட்சுமி, வி.சுபத்திரா, கே.விமலேஸ்வரி, கே.ராதாகிருஸ்ணன், ஆர்.நாகேஸ்வரி, எஸ்.டொன்பொஸ்கோ, ஏ.ஞானேஸ்வரி, ரி.ஜெயதேவன், வை.கஜேந்தினி, பி.குகநேசர், வி.லோகேஸ்வரன், எஸ்.மகேஸ்வரி, எஸ்.நந்தகுமார், என்.நந்தினி,

எஸ்.நித்தியா, வை.சசிதரன், பி.சாந்தினி, எஸ்.செந்தூரமதி, எஸ்.சைலா, கே.சுமித்திரா, கே.விஜயரூபி, ரி.விஜயசங்கர், ஜீ.கல்யாணி, ஜீ.கரோலின், எஸ்.வேர்ஜினியா, எம்.தனேசன், எம்.உதயகுமாரன், ரி.சுரேன், கே.சுரேஷ், ஆர்.வானதி, எஸ்.இளங்கோ, எஸ்.சிவபாலசுப்பிரமணியம், ஜீ.சிவபாதசுந்தரம், எம்.குமுதினி, எஸ்.அபிராமி, என்.சித்திரகலா, எ.செரீன்றூவ்வினா ஜீவராணி. (தொடரும்) (ச)

# உரிமை கோரப்படாத நிலையில் 35 உணவுப் பொதிகள் தேக்கம்

கடந்த மூன்று மாத காலப்பகுதியில் திருகோணமலையில் இருந்து எடுத்துவரப்பட்ட பொதிகளில் 35 உணவுப் பொதிகள் மாத்திரமே உரியவர்களால் உரிமை கோரப்படாத நிலையில் உள்ளதாக யாழ்.பிரதம தபாலதிபர் கே. துரைசிங்கம் தெரிவித்துள்ளார்.

தற்போது விநியோகிக்கப்பட முடியாத நிலையில் 35 உணவுப் பொதிகள் தபாலகத்திலுள்ளதாகவும் அவற்றில் 25 பொதிகள் தொடர்பாக உரியவர்களுக்கு மூன்று தடவைகள் அழைப்புக்கள் விடுக்கப்பட்ட நிலையிலும் உரியவர்கள் இவ் உணவுப் பொதிகளை பெற்றுக் கொள்ளவில்லை.

எஞ்சிய பத்து உணவுப் பொதிகள் முகவரி இல்லாத நிலையில் சிதைவடைந்துள்ளதுடன் இவ் உணவுப் பொதிகள் தொடர்பான விபரங்களினை உரியவர்கள் உறுதி செய்யப்படுமிடத்து அவற்றினை அவர்களிடம் வழங்கப்படும் என தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் குடா நாட்டிலிருந்து வெளிநாட்டு மற்றும் வெளிமாவட்டங்களுக்கான ஆறு தபால் பொதிகள் கப்பல் மூலம் எடுத்துச் செல்வதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் தெல்லிப்பழையில் வைத்து கையளிக்கப்பட்டதாக யாழ்.பிரதம தபாலதிபர் கே.துரைசிங்கம் தெரிவித்தார். (ச-3)

# உப அஞ்சலதிபர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை உப அஞ்சல் அதிபர் சேவையின் உப அஞ்சல் அதிபர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. க.பொ.த.சாதாரணதரப் பரீட்சையில் சிங்களம், தமிழ், ஆங்கில மொழி அல்லது சிங்களம் ,தமிழ், ஆங்கில இலக்கியம், கணிதம், தூயகணிதம், ஆரம்பக் கணிதம், வர்த்தக கணிதம், எண் கணிதம் உட்பட குறைந்தது நான்கு பாடங்களில் திறமைச் சித்திகளுடன் இரு அமர்வுக்கு மேற்படாது ஆறுபாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

குறிப்பிட்ட உப அஞ்சல் அலுவலகங்களின் ஒப்படைப்பு எல்லைகளுக்குள் விண்ணப்பதாரர் விண்ணப்பிக்க, முடிவுத் திகதிக்கு முன்னராக குறைந்தது 5 ஆண்டுகள் வசித்திருத்தல் வேண்டும். நாளை வெளியாகவுள்ள வர்த்தமானிப் பத்திரிகையில் உள்ளவாறாக விண்ணப்பப் பத்திரங்களைத் தயாரித்து விண்ணப்பிக்கவும் 22.05. 2007 ஆம் திகதிக்கு முன்னதாக சம்பந்தப்பட்ட அஞ்சல் அலுவலகங்களின் பகுதிக் கண்காணிப்பாளரை சென்றடைய வேண்டும். பரீட்சைக்கட்டணம் ரூபா 200 ஆம்.

யாழ்.மாவட்டத்தில் வெற்றிடமாகவுள்ள உப அஞ்சல் அலுவலகங்களின் விபரம் வருமாறு, அளவெட்டி வடக்கு, அல்வாய், அத்தியடி, ஊர்காவற்றுறை கிழக்கு, ஊர்காவற்றுறை மேற்கு, யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் கச்சேரி (தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது), கைதடி வடக்கு, கரம்பன் தெற்கு, கரணவாய் தெற்கு, கொக்குவில் மேற்கு, குடத்தனை, குப்பிளான், மண்கும்பான், மண்டுவில், மாரியன்கூடல், மல்லாகம், மருதடி, மாதகல், சோனகத்தெரு, நாகர்கோயில், நாவாந்துறை, நவிண்டில், நெல்லண்டை, பண்ணாகம், பாசையூர், புளியங்கூடல், புலோலி, ராத்தலடி, சாலம்பாய், சங்குவேலி,

சண்டிலிப்பாய், தெல்லிப்பளை மேற்கு, தம்பசிட்டி, தாவடி, திக்கம், திருநெல்வேலிச்சந்தி, திருநெல்வேலி, உடுவில், ஊரதீவு, வலந்தலை, வள்ளான், விளான் [illegible] வெட்டி, வேலணை மேற்கு, வியாபாரிமூலை, குரு[illegible] (தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது), கீரிமலை (தற்[illegible] மூடப்பட்டுள்ளது), மயிலிட்டி, (தற்காலிகமாக [illegible] ளது), கைதடி (தற்காலிகமாக மூடப்பட்டுள்ள[illegible] (தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது), தனங்கி[illegible] மாக மூடப்பட்டுள்ளது).

# மூதூர் படுகொலை வழக்கு விசாரணைக்கு இராணுவத்தினருக்கு நீதிமன்றம் அழைப்பு

(கொழும்பு)

மூதூரில் படுகொலை செய்யப்பட்ட 17 அரச சார்பற்ற நிறுவனப் பணியாளர்களின் கொலை தொடர்பில் பாதுகாப்புத் தரப்பினரின் சாட்சியங்கள் பதிவு செய்யப்படவுள்ளன.

இது குறித்து சாட்சியமளிக்க பாதுகாப்புத் தரப்பினர் எதிர்வரும் 6 ஆம் திகதி கந்தளாய் நீதிமன்றத்திற்கு அழைக்கப்படவுள்ளனர்.

பாதுகாப்புத் தரப்பினரை குறித்த திகதியில் ஆஜர்படுத்துமாறு அநுராதபுரம் மற்றும் மூதூர் மேலதிக நீதிவான் வசந்த ஜினதாச நேற்று இரகசியப் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

இப் பணியாளர்களின் கொலை தொடர்பாக அவுஸ்திரேலிய வைத்திய நிபுணர்கள் மேற்கொண்ட பரிசோதனை அறிக்கையும் நேற்று இரகசியப் பொலிஸாரால் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை அச்சம் காரணமாக சாட்சியமளிக்க முன்வராதவர்கள் யாரும் இருப்பார்களாயின் அவர்கள் உள்ள இடங்களுக்குச் சென்று சாட்சியங்களை பதிவு செய்து கொள்ளுமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (ச–3)

## யப்பான்...

அரசுக்கு வழங்கும் நிதியினை நிறுத்துமாறு தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு யப்பானிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

சந்திப்பில் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜெயானந்தமூர்த்தி, அரியநேந்திரன், பத்மநாதன், செல்வி தங்கேஸ்வரி ஆகியோர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பாகக் கலந்து கொண்டனர். (ச–5)

## கருணாநிதி...

மிரட்டல் கடிதம் ஒன்று வந்துள்ளது. அக்கடிதத்தில்,

திருவிழாவின் போது பல்வேறு இடங்களில் குண்டுகள் வெடிக்கும் என்றும் பக்தர்கள் அதிகமாகத் திரளும் முக்கிய இடங்களைக் குண்டு வைத்துத் தகர்க்கப் போவதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த இரு மிரட்டல் கடிதங்களும் அல் உம்மா என்ற தீவிரவாத இயக்கத்தின் பெயரில் வெங்கடேஷ், அல் உம்மா ஆதரவாளர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ச–5)

## பவள்...

மணிக்கு விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

அதிரடிப் படையினர் சென்று கொண்டிருந்த பவள் கவச வாகனம் விடுதலைப்புலிகளின் கண்ணிவெடியில் முற்றாக சிதைக்கப்பட்டது. அதிரடிப் படைத் தரப்பில் பலத்த இழப்புகள் ஏற்படுத்தப்பட்டன.

இராணுவத்தினரது உடல்கள் அம்பாறை மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளன. காயமடைந்தவர்களும் அங்கு கொண்டு செல்லப்பட்டனர் என்று இளந்திரையன்.

இத்தாக்குதலில் படையினர் 2 பேர் கொல்லப்பட்டனர். அதிரடிப் படையினர் 3 பேர் மற்றும் ஊர்காவற்படையினர் 2 பேர் காயமடைந்ததாகவும் இராணுவத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (ச–5)

## முதலமைச்சர்களை நியமித்து...

தியில் மத்தியகுழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதுடன் இதனை சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவுக்கு சமர்ப்பிப்பதற்கு அங்கீகாரமும் வழ்ங்கப்பட்டுள்ளது.

மாவட்டத்திலான முதலமைச்சர்கள் அரசாங்கத்தினால் நியமிக்கப்படுவதாக யோசனையில் தெரிவிக்கப்பட்டிருந்தாலும் சுதந்திரக் கட்சியின் மத்திய குழுவின் சில உறுப்பினர்கள் இந்த யோசனையை எதிர்த்துள்ளனர்.

இதனால் இந்த விடயத்தில் சிறு திருத்தமும் கொண்டு வரப்பட்டுள்ளது. அதாவது கிராம மட்டத்தில் உருவாக்கப்படும் கிராம இராச்சியங்கள் மூலம் ஒரு பிரதிநிதி தெரிவு செய்யப்படுவார்.

அவ்வாறு மாவட்டம் முழுவதும் உள்ள கிராம இராச்சியங்களால் தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகள் மூலம் மாவட்டத்தின் முதலமைச்சர் தெரிவு செய்யப்படுவார் என்ற யோசனை இறுதியில் மத்திய குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

இந்த விடயங்கள் விவாதிக்கப்படும் போது அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர் ஒருவர் ஜனாதிபதியுடன் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டதாகத் தெரியவருகின்றது. இருப்பினும் ஜனாதிபதி தரப்பில் பாரிய ஆதரவு காணப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

இதேவேளை ஏற்கனவே இரண்டு மாகாணங்களை இணைக்கும்படி கோருகின்ற தமிழ் மக்கள், மாவட்ட மட்டத்திலான அதிகாரப் பகிர்வை ஏற்றுக் கொள்வார்களா? என்று குறிப்பிட்ட அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர் கேள்வி எழுப்பியதாகவும் ஆனால் மத்திய குழுவினால் அந்த யோசனை கவனத்தில் கொள்ளப்படவில்லை எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில் மாகாண மட்டத்தில் அந்தஸ்து பகிர்வதா? அல்லது மாவட்ட மட்டத்தில் அதிகாரத்தைப் பகிர்வதா? என்பது குறித்து மத்திய குழுக் கூட்டத்தில் சர்ச்சை ஏற்பட்டதால் இறுதியில் இது குறித்துத் தீர்மானிக்க வாக்கெடுப்பும் நடத்தப்பட்டுள்ளது.

இதில் மாகாண சபை மட்டத்தில் அதிகாரத்தைப் பகிர வேண்டும் என்ற யோசனைக்கு ஆதரவாக அமைச்சர்களான டிலான் பெரேரா, அத்தாவிட செனவிரட்ண மற்றும் மேல் மாகாண முதலமைச்சர் றிஜினோல் கூரேயும் வாக்களித்துள்ளனர்.

ஆனால் 50ற்கும் மேற்பட்ட மத்திய குழு உறுப்பினர்களில் ஏனைய அனைவரும் மாவட்ட மட்டத்தில் அதிகாரத்தைப் பகிர வேண்டுமென்ற யோசனைக்கு ஆதரவாக வாக்களித்துள்ளனர்.

சுதந்திரக் கட்சியின் தீர்வு யோசனையை தேசிய மட்டத்தில் செனற் சபை ஒன்றை உருவாக்குவது குறித்து யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த செனற் சபைக்கான உறுப்பினர்களை அரசாங்கமே நியமிப்பதுஎன்றும் தெரிவிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. (ச–5)

## தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளக்...

யோசனைகளை இரண்டு மாதத்திற்குள் முன்வைக்கப்படவுள்ளது என நேற்றுக் கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இதனைக் கூறினார்.

இதுவரை பத்துக் கட்சிகள் தமது யோசனைகளை வழங்கியுள்ளன. இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், ஜாதிக ஹெலஉறுமய ஆகிய கட்சிகள் தமது தீர்வு யோசனைகளைத் தயார் நிலையில் வைத்திருப்பதாகத் தெரிவித்துள்ளன.

எனினும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் யோசனை சமர்ப்பித்த பின்னரே தமது யோசனை சமர்ப்பிக்கப்படுமென அக்கட்சிகள் கூறியதாக அமைச்சர் திஸ்ஸ விதாரண குறிப்பிட்டுள்ளார். இதேவேளை ஐக்கிய தேசியக் கட்சியும் ஜே.வி.பியும் தமது யோசனைகளைத் துரிதமாக முன்வைக்குமாறு அவர் கேட்டுள்ளார். (ச–3)

## அரையிறுதிப்...

போட்டியைப் பார்க்க வேண்டியிருக்கின்றது என்று விடுதலைப்புலிகளின் பேச்சாளர் இராசையா இளந்திரையன் தெரிவித்தார். ஏ.எவ்.பி.செய்தி நிறுவனத்திற்கு தொலைபேசியில் பேசிய அவர் இத்தகவலைத் தெரிவித்தார்.

விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனும் ஒரு கிரிகெட் ரசிகர் என்பது குறிப்பிடத்தக்கது. செவ்வாய் காலைதான் யாழ்ப்பாணத்தின் வடபகுதியிலுள்ள இலங்கை இராணுவ முகாம் மீது விடுதலைப்புலிகள் விமானத் தாக்குதலை நடத்தியிருந்தனர்.

இந்நிலையில்தான் இரவில் இந்த போர் நிறுத்த அறிவிப்பு வெளியானது. இலங்கை கிரிக்கெட்அணியில் இரு தமிழர்களும் இடம் பெற்றிருக்கின்றார்கள். இலங்கை அரசாங்கமும் இந்தப் போட்டிக்காக கிரிகெட்டின் நேரடி ஒளிபரப்பை இலங்கை முழுவதும் தெரியும்படி செய்திருந்தது என்று அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச–5)

## மன்னாரில் நேற்றுக் காலை ...

மன்னார் தாக்குதல் குறித்து விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளதாவது,

மன்னாரில் இராணுவத்தினர் மேற்கொண்ட பாரிய முன்னகர்வை தமிழீழ விடுதலைப்புலிகள் நேற்று முறியடித்தனர். இதில் இராணுவத்தினருக்குப் பாரிய இழப்புக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

மன்னாரில் இரணைஇலுப்பைக்குளத்திலிருந்து வலயன்கட்டு நோக்கி இராணுவத்தினர் மேற்கொண்ட பாரிய நகர்வு நடவடிக்கை விடுதலைப்புலிகளால் முறியடிக்கப்பட்டுள்ளது.

மன்னார் இரணைஇலுப்பைக்குளத்திலிருந்து நேற்றுக் காலை 9 மணிக்கு இராணுவத்தினர் பெருமெடுப்பில் கனரக கவச வாகனங்கள் சகிதம் வலயன்கட்டு முள்ளிக்குளம் பகுதிகளை நோக்கிய முன்னகர்வு நடவடிக்கையை மேற்கொண்டனர்.

இராணுவத்தினருக்கு ஆதரவாக மிகச் செறிவான எறிகணைச் சூட்டாதரவும் மேற்கொள்ளப்பட்டது. நேற்றுக்காலை 9 மணிக்கு மேற்கொண்ட நகர்வு நடவடிக்கைக்கு எதிராக விடுதலைப்புலிகள் பரிசங்குளத்தில் முறியடிப்புத் தாக்குதலை நடத்தினர்.

இராணுவத்தினருக்கு எதிராக பரிசங்குளத்தில் வைத்து விடுதலைப்புலிகள் நடத்திய முறியடிப்புத் தாக்குதலில் இராணுவத்தினருக்கு கடும் இழப்புக்கள் ஏற்படுத்தப்பட்டன.

இராணுவத்தினரின் நகர்வு நடவடிக்கை பிற்பகல் 2 மணிக்கு விடுதலைப்புலிகளால் முறியடிக்கப்பட்ட நிலையில் ஆயுதங்கள் மற்றும் வெடிபொருள்களைக் கைவிட்டு இரணைஇலுப்பைக்குளத்திற்கு இராணுவம் பின்வாங்கியது.

இராணுவத்தினர் கைவிட்டுச் சென்ற ஆயுதங்கள் மற்றும் வெடிபொருள்கள் விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன. முறிடிக்கப்பட்ட இத் தாக்குதலில் விடுதலைப் புலிகளுக்கு இழப்புக்கள் எதுவும் ஏற்படவில்லை.

அநுராதபுரம் மருத்துவமனையில் கொல்லப்பட்ட இராணுவத்தினர் 12 பேரின் சடலங்கள் உள்ளதாகவும் 40ற்கும் அதிகமான இராணுவத்தினர் காயமடைந்த நிலையில் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டதாகவும் கொழும்புத் தகவல்கள் தெரிவித்ததாகப் புலிகள் தெரிவித்தனர்.

இதேவேளை வடமேற்கே மன்னார் மாவட்டம் மடுப் பிரதேசத்திற்குக் கிழக்கே இராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் இடம்பெற்ற மூன்று வெவ்வேறு மோதல் சம்பவங்களில் விடுதலைப்புலிகள் தரப்பில் 21 பேர் கொல்லப்பட்டுள்ளதாகத் தேசிய பாதுகாப்புக்கான ஊடகத் தகவல் மையம் தெரிவித்துள்ளது.

இந்த மோதல்களில் இராணுவத்தரப்பில் 2 பேர் கொல்லப்பட்டுள்ளதுடன் 23 பேர் காயமடைந்துள்ளதாகவும் ஊடகத் தகவல் மையம் தெரிவித்துள்ளது.

விடுதலைப்புலிகள் ஓமந்தை மற்றும் ஓமந்தைக்கு மேற்கேயுள்ள இராணுவ நிலைகள் மீது நேற்றுக் காலை முதல் மோட்டார்த் தாக்குதல்களை நடத்தியதையடுத்து புலிகளின் பீரங்கி நிலைகளைத் தாக்கியழிப்பதற்காக இராணுவத்தினர் நேற்று மேற்கொண்ட முன்னேற்ற நகர்வின் போது இராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் கடும்மோதல்கள் ஏற்பட்டதாகவும் அதன்போதே இந்த இழப்புக்கள் நேர்ந்துள்ளதாகவும் இராணுவம் தெரிவித்துள்ளது.

மோதல்களில் இறந்த இராணுவத்தினரின் உடல்களும் காயமடைந்த சிப்பாய்களும் உலங்கு வானூர்தி மூலமாக அநுராதபுரத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டதாகவும் இராணுவத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (ச–5)

## இராணுவத்...

நடைபெற்ற போதே அவர் இவ்வாறு கூறினார்.

விடுதலைப்புலிகளின் இலகு ரக விமானம் ஒன்று பலாலி படைத் தளம் மீது நேற்று முன் தினம் நடத்தவிருந்த குண்டுத் தாக்குதல் படையினர் விழிப்புணர்வோடு இருந்ததனால் தவிர்க்கப்பட்டுள்ளது.

பலாலி படைத் தளத்திலிருந்து படையினர் இந்த விமானத்தை நோக்கி நடத்திய தாக்குதல் காரணமாக படைத் தளத்திற்கு வெளியே மயிலிட்டியில் மூன்று குண்டுகளை வீசிவிட்டு அது தப்பியோடியுள்ளது.

எனினும் படையினர் நடத்திய தாக்குதல் காரணமாக அவ் விமானத்திற்குச் சேதம் ஏற்பட்டிருக்கலாம் என நான் நம்புகின்றேன். விடுதலைப்புலிகளின் எவ்விதமான தாக்குதல்களை முறியடிக்கவும் படையினர் விழிப்புடன் இருக்கின்றனர் என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை பலம் வாய்ந்த விமானப் படைத் தளத்தில் தாக்குதல் நடத்தவந்த விடுதலைப்புலிகளின் சிறிய ரக விமானம் ஒன்றை படையினரால் சுட்டுவீழ்த்த முடியாமல் போனதற்கான காரணம் என்ன என்று ஊடகவியலாளர் ஒருவர் கேள்வி எழுப்பினார்.

அதற்குப் பதிலளித்த குறூப் கப்டன், பலாலிப் படைத் தளத்தை நோக்கி விமானம் வருவதாக தகவல் கிடைத்தவுடனேயே படையினர் உஷார் அடைந்து தாக்குதலுக்குத் தயாரானார்கள்.

விளக்குகளை அணைத்த நிலையில் ஏரி வழியாக மிகவும் தாழப் பறந்து விமானம் வந்ததனால் படையினரால் அதனைக் கண்டு கொள்ள முடியவில்லை.

எனினும் விமானம் பறக்கும் சத்தத்தை மட்டுமே கேட்க முடிந்தது. எனவே படையினர் நாலா பக்கங்களிலும் தாக்குதல்களை நடத்தினர். இதனால் குறிப்பிட்ட இலக்குகளைத் தாக்க முடியாமல் புலிகளின் விமானம் தப்பிச் சென்றது.

படையினரின் தாக்குதல் காரணமாக விமானத்திற்குச் சேதம் ஏற்பட்டிருக்கலாம் என்றும் அவர் கூறினார். (ச–5)

PATRICIAN INSTITUTES
பற்றிசியன் தொழில் பயிற்சி நிறுவனங்கள்
VACANCY
Computer Instrucror
கணனி போதனாசிரியர்
மேற்படி பதவிக்கு கீழ்க் குறிப்பிடப்படும் கற்கை நெறிகள் கற்பிக்க தகுதியுடையோர் உடன் விண்ணப்பிக்கவும்.
1.Advanced in Computer Programming
2.Diploma in Microsoft Office
3.Diploma in Computer Accounting
4.Diploma in Type Setting
5.Diploma in Desktop Publishing
6.Internet & Email Technology
விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி 30.04.2007. விண்ணப்பங்கள் நேரில் அல்லது பதிவுத் தபால் மூலம் ஏற்றுக் கொள்ளப்படும்.
மேலதிக விபரங்களுக்கு:-
REGISTRAR
PATRICIAN INSTITUTES
59, ST.PATRICKS ROAD,
JAFFNA.
T.P.-222 6148

## பிரட்ஸ்கரின் கிளிநொச்சிப்...

அமைச்சருமான ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

தேசிய பாதுகாப்புத் தொடர்பாக விளக்கமளிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று தேசிய பாதுகாப்புக்கான ஊடக மையத்தில் நடைபெற்ற போதே அவர் இவ்வாறு கூறினார். அமைச்சர் மேலும் கூறியதாவது,

நாட்டின் தற்போதைய நிலை மற்றும் சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பாக விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் கடந்த திங்களன்று கிளிநொச்சி செல்லவிருந்தார்.

அதற்குமுன் பாதுகாப்பு அமைச்சும் வெளிவிவகார அமைச்சும் நோர்வேத் தூது வரை அழைத்து நாட்டின் தற்போதைய நிலைமை குறித்து அவருக்கு விளக்கிக் கூறியது. அண்மையில் மட்டக்களப்புக்குச் சென்ற இராஜதந்திரிகளுக்கும் வெளிநாட்டுத் தூதுவர்களுக்கும் ஏற்பட்ட நிலைமை இங்கு சுட்டிக்காட்டப்பட்டது.

எமது நாட்டில் கடமை புரியும் வெளிநாட்டுத் தூதுவர்களைப் பாதுகாக்கும் பொறுப்பு அரசாங்கத்திற்கு உண்டு என்ற காரணத்தால் சமகால நிலைமை அவருக்கு விளக்கிக் கூறப்பட்டது.

எனவே கிளிநொச்சிக்கு இப்போது போவதில்லை என்ற முடிபை நோர்வேத் தூதுவரே மேற்கொண்டார். அரசாங்கம் அவரை எந்த வகையிலும் நிர்ப்பந்திக்கவில்லை. அவர் கிளிநொச்சிக்கான பயணத்தை இரத்துச் செய்யவில்லை. சிறிது காலத்திற்குப் பிற்போட்டுள்ளார்.

எனவே நோர்வேத் தூதுவர் கிளிநொச்சிக்கான விஜயத்தை அரசாங்கம் பலவந்த மாகத் தடுத்ததாகக் கூறுவது ஆதாரமற்ற குற்றச்சாட்டாகும். இதனை அரசாங்கம் மறுக்கின்றது என்றும் அமைச்சர் மேலும் கூறினார். (எ–5)

...அன்.கோ.ஸ்தாபனத்தாரால் இல.03, இரண்டாம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.04.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.